# திராவிடன்

ஆசிரியர் : என்.வி.என்.



வருங்கால சமுதாயம் வாழ
வாடுகின்றார் வெஞ்சிறையில்!

## சென்று வருகிறேன்!

•

சென்று வருகிறேன்!
செந்தமிழ் காத்திடும்
செயல் வீரனே—
சென்று வருகிறேன்!

அண்ணன் உள்ளே
சென்றிருக்கிறான்-
அறப்போர் நடாத்தி
என்று நீ வெளியே
சொல்லு! உன் கண்
களிலே ஆர்வ ஒளி
வெளிப்படட்டும்!

தம்பி இருக்கிறான்
வெளியே தமிழ் காத்
திட என்று நான்
சிறைக்கு உள்ளே
இருந்து சொல்லு
வேன்.

என் கண்களில் உன்
னைத் தர்பியாகப்
பெற்றதனால் ஏற்படும்
பெருமிதம் ஒளிவிடும்!
சென்று வருகிறேன்!

23—11—63
10 பக்கங்கள்

வார இதழ்

16 காசு.

# செந்தமிழ் காக்கும் பெரும்போரில் சிறைப்பட்டார் நம் வழிகாட்டி !

## அண்ணா, தலைமைக்கழகச் செயலாளர்கள், எண்ணற்ற தோழர்கள் - சிறையில் !

## சட்டத்தை ஏவி விடும் காங்கிரசே ! சமுதாயம் பதில் சொல்லும் - '67 வரட்டும் !

இந்தித் திணிப்பை எதிர்த்து இத்திங்கள் 17-ம் நாள், அறிஞர் அண்ணா அவர்களும், தோழர்கள் டி. எம். பார்த்தசாரதி, டி. கே. பொன்னுவேலு, கே. பி. சுந்தரம், வெங்கா ஆகியோரும் அரசியல் சட்டத்தின் மொழிப் பிரிவுக்கு தீயிடப் போவதாகப் போராட்டத் திட்டம் அறிவிக்கப் பட்டிருந்தது.

இந்திமொழி வெறியர்களின் போக்கில் அதிருப்தி கொண்டிருக்கும் பல தரப்பட்ட மக்களும் இந்தப் போராட்டத்தை மிக ஆவலுடன் எதிர்நோக்கி இருந்தனர்.

அறிஞர் அண்ணா அவர்கள் பல முறை—பல மேடைகளில்—ஏடுகளில்—தன்னையும் தன்னைச் சேர்ந்த ஐவர் அணியும், மட்டுமே அரசியல் சட்டத்தின் மொழிப் பிரிவைக் கொளுத்தும் போராட்டத்தில் ஈடுபடும் என்று திட்டவட்டமாகத் தெரிவித்திருந்தும், புதியதாகப் 'பொறுப்பேற்றுள்ள கனம். பக்தவச்சலம் அவர்களது நிர்வாகம், மூன்று நான்கு நாட்களுக்குள்ளாகவே தனது அடக்கு முறையைக் கட்டவிழ்த்து விட்டது'

13-ந் தேதி மாலையே தனது அடக்கு முறையைக்கட்டவிழ்த்து விட்ட சர்க்கார், போலீஸ் அதிகாரிகளை நகரின் பலபகுதிகளிலும் நுழையவிட்டு, எல்லாகழகத் தோழர்களையும் கைது செய்ய ஆரம்பித்தது.

தலைமைக் கழக வெளியீட்டுச் செயலாளர் சி. பி. சிற்றரசு, தோழர் எ. வி. பி. ஆசைத்தம்பி, ''நம் நாடு'' பொறுப்பாசிரியர் காஞ்சி. கல்யாணசுந்தரம், சென்னை மாவட்டச் செயலாளர் நீலநாராயணன், பொதுக் குழு உறுப்பினர்களான கே. எம். கண்ணபிரான், கோ. செங்குட்டுவன், மாநகராட்சிமன்ற உறுப்பினர்களான எம். ஆர். கண்ணன், அ. அ. கபாலமூர்த்தி, இரா. சம்பந்தம், டி. கே. கபாலி, தி. சு. நல்லதம்பி, க. பார்த்தசாரதி, கோ. இளவரசு, அ. சி. துளசிங்கம், சு. பாலன், மயிலைப் பகுதிச் செயலாளர் எஸ். வி. மீவேலு, பெரம்பூர் பகுதிச் செயலாளர் மு. மாசிலாமணி உள்ளிட்ட பல கழகத்தோழர்கள் கைது செய்யப்பட்டனர்.

அதுமட்டுமல்லாமல் நூற்றுக்கு மேற்பட்ட தோழர்களைப் போலிசார் கைது செய்து காவலில் வைத்தனர்.

நவம்பர் 14 ம் நாள், இந்தியத் துணைக்கண்டத்தின் பிரதமர் பண்டித நேரு அவர்களுக்குப் பிறந்தநாள்பரிசாக கனம் பக்தவத்சலம் அவர்கள் அடக்கு முறையைச் காணிக்கையாக்கினார்.

கழகத்தின் கொள்கைபரப்புச் செயலாளர் டாக்டர்சத்தியவாணி முத்து அவர்களும் கைது செய்யப்பட்டு, காவல் நிலையத்தில் இடவசதி இல்லாத காரணத்தால், அவர்களை வீட்டிலேயே சென்று இருக்கச் சொல்லி எந்த நேரத்திலும் கைது செய்யப்படலாம் என்று சொல்லி அனுப்பினர்.

13 ந் தேதி கைது செய்யப்பட்டவர்களில் சி. பி. சி, ஆசைத்தம்பி, காஞ்சி கல்யாணசுந்தரம் நீலநாராயணன், மற்றும் மாநகராட்சி உறுப்பினர்கள் உள்ளிட்ட 16 தோழர்களை மட்டும் விடுதலை செய்தனர்.

முன்னாள் இரவு கைது செய்து அடுத்த நாள் விடுவித்த அரசினரின் விசித்திரப் போக்கை எண்ணி சென்னை மாநகரமக்கள் எள்ளி நகையாடினர். மற்ற தோழர்களை அரசாங்கம் விடுவிக்காமல் காவலிலேயே வைத்து இருந்தது.

### விடுவிக்கப்பட்டோர் மீண்டும் கைது.

முதல் நாள் கைது செய்து விடுவிக்கப்பட்ட கழக முன்னணி வீரர்களான சி. பி. சி., சத்தியவாணிமுத்து, ஆசைத்தம்பி, காஞ்சி கல்யாணசுந்தரம், நீலநாராயணன், மற்றும் மாநகராட்சி உறுப்பினர்கள், பகுதிக் கிளைக் கழகச் செயலாளர்கள் மீண்டும் கைது செய்யப்பட்டனர். அதோடன்றி சென்னை நகரில் பல இடங்களிலும் ஏராளமான கழகத் தோழர்கள் கைது செய்யப்பட்டனர்.

### அறிஞர் அண்ணா கைது

தாம் ஏற்கனவே அறிவித்திருந்தபடி போராட்டத்தில் கலந்துகொள்வதற்காக அறிஞர் அண்ணா அவர்கள், தோழர்கள் என்.வி. நடராசன், எ. கோவிந்தசாமி, சி. வி. ராசகோபால் மற்றும் அண்ணா அவர்களின் அணியைச் சேர்ந்த டி. எம். பார்த்தசாரதி, டி. கே. பொன்னுவேலு, கே. பி. சுந்தரம், வெங்கா ஆகியோர் 16—11—63 அன்று காலை காஞ்சியிலிருந்து கார்மூலம் சென்னை புறப்பட்டனர்

அறிஞர் அண்ணா அவர்கள் வரும் வழியெல்லாம் போலீஸ் காவல் போடப்பட்டிருந்தது.

அறிஞர் அண்ணா அவர்கள் காஞ்சியிலிருந்து 'வரும்போது சென்னைநகர எல்லையில், நாவலர் நெடுஞ்செழியன், கலைஞர் மு. கருணாநிதி, கே. எ. மதியழகன், கி. மனோகரன். க. ராசாராம், இரா. செழியன் ஆகியோர் அண்ணா அவர்களைச் சந்தித்தனர்.

பின்னர் தொடர்ந்து அண்ணா அவர்களும் மற்ற தோழர்களும் சென்னை நோக்கி வருகையில், அமைந்தகரை அருகில் அண்ணா அவர்களைப் போலீஸ் துணை ஆணையாளர் திரு. பரமேஸ்வர மேனன் அவர்கள் அண்ணா அவர்களையும், அவரது அணியைச் சார்ந்த டி. எம். பார்த்தசாரதி, டி. கே. பொன்னுவேலு, கே. பி. சுந்தரம், வெங்கா ஆகியோரையும் கைது செய்து அழைத்துச் சென்றனர்.

அண்ணா அவர்களும் மற்ற தோழர்களும் கைது செய்யப் பட்டதைக் கேள்வியுற்ற நகர மக்கள் காங்கிரஸ் ஆட்சியின் கோழைத்தனமான அடக்கு முறையைக் கண்டித்து ஆங்காங்கே பேசிய வண்ணமுள்ளனர்.

மொழியைக் காக்கப் போராடும் மாபெருந் தலைவரை சட்டத்தின் துணையைக் கொண்டு சிறைக்குள் தள்ளிய அரசாங்கம், 1967ல் தன்னைச் சந்தித்துத் தானே தீரவேண்டும், அப்போது தக்க பதில் கூறுவோம் என்று மிக உறுதியுடன்—ஆனால் அதே நேரத்தில் பொறுமையுடன் அண்ணா அவர்களின் வேண்டுகோளுக்கேற்ப மக்கள் மன்றம் அமைதி காத்து நிற்கிறது.

### என். வி. நடராசன்<br>ஏ. கோவிந்தசாமி<br>கைது

காங்கிரஸ் காட்டாட்சி கட்டவிழ்த்து விட்டுள்ள அடக்குமுறை தலைவிரித்தாடி கண்மூடித்தனமான போக்கில் நடந்து கொண்டது.

காஞ்சிபுரத்திலிருந்து சென்னைக்கு அறிஞர் அண்ணா அவர்களுடன் வந்த அமைப்புச் செயலாளர் என். வி. நடராசன், தொழிற்சங்கச் செயலாளர் ஏ. கோவிந்தசாமி ஆகியோர் அண்ணா அவர்கள் கைது செய்யப்பட்டு விட்டபின், நுங்கம்பாக்கத்தில் உள்ள அண்ணா அவர்களது இல்லத்தில் நாவலர் நெடுஞ்செழியன், கலைஞர் கருணாநிதி ஆகியோருடன் பேசிக் கொண்டிருந்தனர்.

உடனே போலீசார் அங்கே வந்து, என். வி. என்., கோவிந்தசாமி ஆகிய இருவரையும் கைது செய்து அழைத்துச் சென்றனர்.

அதேபோன்று வழக்கறிஞர் வேலூர் நாராயணனைக் கைது செய்தது ஏன் என்று கேட்கச் சென்ற மற்றொரு வழக்கறிஞர் கணபதி அவர்களையும் அங்கேயே கைது செய்து, தனது அடக்கு முறை வெறியைத் தணித்துக் கொள்ள முயன்றிருக்கிறது.

### நாடெங்கும் கழகத் தோழர்கள் கைது

காங்கிரசாட்சியின் அடக்குமுறையின் காரணமாக நாடெங்

(9-ம் பக்கம் பார்க்க)

# இலக்கிய உலகம்!

பேராசிரியர்
மா. கி. தசரதன்
எம். ஏ.

## சங்க இலக்கியங்கள்

நமது முன்னோர்கள், வாழ்ந்த வாழ்க்கையை எண்ணிப்பார்த்து இன்று அப்படி இல்லையே என்று ஏங்குகின்றோம். அன்று அவர்கள் உலகம் புகழ வாழ்ந்தார்கள். வீரர்களாக வாழ்ந்தார்கள்; அறிவின் அரசர்களாக விளங்கினார்கள் ; நாட்டின் நலம் கொழித்தது; மகிழ்ச்சி பொங்கியது; நாகரிகம் விளங்கியது, என்றெல்லாம் அறிகின்றோம். அறிந்து மகிழ்கின்றோம்.

அவர்கள் வாழ்ந்ததை நாம் காணவில்லை என்றாலும், இந்தச் செய்திகளை நாம் எப்படி அறிகின்றோம்? சில நூல்கள், பாடல்கள் நமக்கு அந்த வாழ்க்கையை ஓவியம்போல் எடுத்து விளக்குகின்றன. அந்த நூல்களுக்குத் தான் **சங்க இலக்கியங்கள்** என்று பெயர்.

### தெரியாது!

'அந்தக் காலம்' என்று சொன்னால் போதாது, 'எந்தக் காலம்? என்று சுட்டிக்காட்டி விளக்க வேண்டாமா? ஆம்! ஆனால் முடியாது? ஏன்? நமக்கு எழுதி வைக்கப்பட்ட வரலாறு கிடையாது. இன்ன ஆண்டில், இன்னது, நடந்தது; இன்னார் நடத்தினார் என்று சொல்லும் வரலாறு நம்மிடத்திலே இல்லை. இது நமது இனத்தின் குறையோ, அன்றி இதிலேதான் நமது சிறப்பு இருக்கிறதோ தெரியவில்லை. எப்படியோ—இந்த ஆண்டு முதல் இந்த ஆண்டு வரை உள்ள இத்தனையாண்டுகள் சங்க காலம் என்று சொல்ல முடியவில்லை. என்றாலும், ஆராய்ச்சியாளர்கள் பலவாறு ஆராய்ந்து பல காலம் ஆராய்ந்து, 'இதுதான்' என்று குறிப்பாக ஒரு காலத்தைச் சொல்கின்றனர். அந்தக் காலம், ஏறத்தாழ இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் வரை இருந்த ஒரு காலத்தைக் குறிக்கிறது. இது, சங்க காலத்தின் முடிவு; எப்போது தொடங்கியது என்பதை அறிய இயலவில்லை.

### அந்த இலக்கியங்கள் யாவை?

காலம் தெரியாவிடினும், அந்தக் காலத்தில் எழுதிய நூல்களாவது தெரியுமா? தெரியும். 'இதோ இவைதான்' என்று சில நூல்களை எடுத்துக்காட்டி, இவை சங்க இலக்கியங்கள் என்று சொல்ல இயலும். அப்படிக் காட்டிக் கூடிய நூல்களை இரண்டு பிரிவுகளாகப் பிரித்து வைத்துள்ளனர். ஒன்று **பத்துப்பாட்டு** என்றும் இன்னொன்று **எட்டுத் தொகை** என்றும் அவை அழைக்கப்படுகின்றன. ஆக, மொத்தம் பதினெட்டு நூல்கள்தானா அந்தக் காலத்தில் எழுதப்பட்டன அல்லவேறு எத்தனையோ நூல்கள் எழுதப்பட்டிருக்கின்றன. போன இடம் தெரியவில்லை. கடல் பொங்கி வந்து நாட்டை விழுங்கியபோது சில அழிந்துவிட்டன என்றும், நெருப்பிலே சில நீறாகி விட்டன என்றும், சொல்கிறார்கள் அப்படி அழிந்துவிட்ட நூல்களின் பெயர்கள் மட்டும் இப்போது நமக்குத் தெரிகின்றன.

உள்ள நூல்களையேனும் அறிந்துகொள்வோம்.

### பத்துப் பாட்டு

பெயரிலேயே, பத்துப்பாட்டுகளின் தொகுப்பு நூல் இது என்பது தெரிகிறது.

1. திருமுருகாற்றுப் படை,
2. பொருநர் ஆற்றுப்படை,
3. சிறு பாணாற்றுப் படை,
4. பெரும் பாணாற்றுப் படை,
5. முல்லைப் பாட்டு,
6. மதுரைக் காஞ்சி,
7. நெடுநல்வடை,
8. குறிஞ்சிப்பாட்டு,
9. பட்டினப் பாலை,
10. மலைபடுகடாம்

இவையே பத்துப்பாட்டு என்று சொல்லப்படும் நூல்கள்.

### 1. திரு முருகு ஆற்றுப்படை

புலவர் ஆற்றுப்படை என்று இன்னொருபெயரும் இந்த நூலுக்கு வழங்கும். ஆறு என்றால் 'வழி' என்று ஒரு பொருள் உண்டு. ஆற்றுப்படுத்துதல், வழிப்படுத்துதல் என்றாகும். படை என்பது படுத்துதல் என்று பொருள்படை.

முருகக்கடவுளுடைய அருள் பெற்ற ஒரு புலவர் எதிரே வந்த மற்றொரு புலவருக்கு முருகன் இங்கிங்கு கோயில் கொண்டுள்ளார். இன்ன இன்ன இயல்பையுடையவர்; இவ்வாறு சென்று, இவ்வாறு வழிபட்டால் அவனுடைய அருளைப் பெறலாம் என்று எடுத்துச்சொல்லி வழியனுப்பியதாக இப்பாடல் புனையப்பெற்றுள்ளது. 317 அடிகளை உடையது இது.

#### இதை இயற்றியவர்

மதுரைக் கணக்காயனார் மகன் நக்கீரன்.

#### எங்கு உள்ளார்

திருப்பரங் குன்றம், திருச்சீரலைவாய், திருவாவினன் குடி, திருவேரகம் மலைகள்தோறும், ஊர்கள்தோறும் முருகன் காணப்படுவான் என்று சொல்லப் படுகிறது. அங்கெல்லாம் சென்று, அவன் புகழ் பாடித் துதித்து வேண்டி நிற்பார்க்கு **பழமுதிர் சோலையில்** கோயில் கொண்டுள்ள அவன் அருள் கிடைக்கும் என்று இந்தப் பாட்டு குறிப்பிடுகிறது.

### 2. பொருநர் ஆற்றுப்படை

**கரிகால் பெருவளத்தான்** என்ற சோழமன்னனிடம் பெரும் பரிசில்கள் பெற்றுவரும் பொருநன் ஒருவன் தன் எதிரில் வந்த வறிய பொருநன் மற்றொருவனுக்கு கரிகாலனின் வளம், வீரம் கொடை முதலியவற்றை எடுத்துச்சொல்லி, அவனிடம் சென்று பரிசில் பெற்று மகிழுமாறு வழிபடுத்துவதாக இந்தப் பாடல் அமைந்திருக்கிறது 248 அடிகளை உடையது. இதனை இயற்றிய புலவர் **முடத்தாமக் கண்ணியார்** என்பவராவர்.

''புலவனே, நாங்களும் அவனைக் காணும் முன்னர், உன்னைப் போலவே வறுமையில் வாடிக் கிடந்தோம். அவன் அவைக்குச் சென்று அவனைக் கண்ட பின்னர் இதோ, இத்தகைய சிறப்புகளோடு வருகின்றோம். நீயும் அவ்வாறே அவன்பால் சென்று பொருள் பெறுவாயாக அவன் கருவில் திருவுடையவன்; இளவயதிலேயே வெண்ணிப் பறந்தலை என்ற இடத்தில் சேர பாண்டிய மன்னர்களை ஒருங்கே வென்று புகழ் கொண்டவன், அவன் உங்களுக்கு, பொற்றாமரைப்பூவை அணிவிப்பான்; பட்டுடைகள் நல்குவான்; நாடும் அளிப்பான்; உங்கள் வறுமை தொலையும்.'' என்றெல்லாம் பரிசில் பெற்ற புலவன் எடுத்து இயம்புகின்றான்.

### 3. சிறுபாண் ஆற்றுப் படை

ஓய்மான் நாட்டு **நல்லியக் கோடன்** என்ற வள்ளலிடம் பரிசில் பெற்ற பாணன் ஒருவன் தன் எதிரில் வந்த இன்னொரு பாணனுக்கு நல்லியக்கோடனின் பண்புகளை எடுத்துச் சொல்லி, அவன்பால் சென்று பரிசில் பெற்று மகிழுமாறு கூறுவதாக இந்தப் பாட்டு அமைந்திருக்கிறது. 269 அடிகள் கொண்டது இப்பாடல்.

பாணரில் சிறுபாணர்; பெரும் பாணர் என்று இரண்டு வகையினர் இருந்தனர் என்று அறிகின்றோம். இது சிறுபாணர் ஆற்றுப் படை.

இதனைப்பாடியவர், இடைக்கழி நாட்டு நல்லூர் **நத்தத்தனார்** என்ற புலவர் ஆவர்.

பாணனே, வேறு இடங்களை நாடி நீ செல்லவேண்டம். அங்கே கிடைக்கும் பரிசில்களை விடப் பெரிய பரிசில், நல்லியக் கோடனிடம் கிடைக்கும் ,மயிலுக்கு ஆடை அணிவித்த **பேகன்**, முல்லைக்குத்தன் தேர் ஈந்த **பாரி**, குதிரைகளோடு பல பரிசில்களை ஈந்த **காரி**, நாகம் அளித்த ஆடையை ஆண்டவன் உருவத்திற்கு அளித்த **ஆய்** அருமையான நெல்லிக் கனியை அவ்வைக்கு அளித்த **அதியமான்**, தன்னை அடைந்தவர்க்கு அள்ளி அள்ளி கொடுத்த **நள்ளி**, என்று இவர்கள் எழுவர் அளித்த கொடையை அவன் ஒருவனே தந்து கொண்டிருக்கிறான். அவனைப் பாடிப் பொருள் பெறுவதற்கு முன் கொடிய வறுமை எங்களையும் வாட்டி வருத்தியது. இப்போதோ நாங்கள் செல்வச் செழிப்பில் திளைக்கின்றோம்.

''அவன் நகர் சென்று சேரும் வழியில் உள்ள நெய்தல் நில மக்களும், முல்லை நில மக்களும், மருத நில உழவர்களும், உங்களை அன்போடு வரவேற்று உண்டி முதலியன தந்து உபசரிப்பர். பின் அவன் நகர் அடைந்ததும் நல்ல பரிசில் பெறுவீர்'' என்று கூறுகின்றார்.

தமிழகத்தின் வளமும், மக்களின் விருந்தோம்பும் பண்பும், ஆடை அணிமணிகளின் சிறப்பும் இந்தப் பாட்டில் தெளிவாக விளக்கப்படுகிறது. இயற்கை யழகு கொஞ்சும் பகுதிகள் நிறைந்துள்ளது.

### 4. பெரும்பாண் ஆற்றுப்படை

காஞ்சிபுரத்தில் அரசாண்டிருந்த **தொண்டைமான் இளந்திரையன்** என்னும் மன்னன்பால் ஒரு பெரும்பாணனைவழிப்படுத்தியதாக

இப்பாடல் அமைந்துள்ளது. 500 அடிகள் கொண்டது.

இப்பாடல், கடியலூர் உருத்திரங் கண்ணனார் என்ற புலவர் பாடியதாகும்.

சிறுபாணாற்றுப் படையில் உள்ளது போலவே, இப்பாடலிலும் தமிழகத்தின் இயற்கை எழில், வளம் முதலியவற்றை எடுத்துக் கூறி தமிழ் மக்களின் பண்பு மேம்பாட்டை விளக்கியுள்ளார் புலவர். அதனைவிட, இப்பாடலில் மிகுதியான செய்திகளும் விளக்கங்களும் உள்ளன. நெய்தல் முதலான நால்வகை நிலங்களில் வாழும் மக்களின் உணவு வகைகள், பழக்க வழக்கங்கள் ஆகியவைகளை இப்பாடலின் மூலமாக நாம் அறிய இயலும்.

## 5. முல்லைப்பாட்டு

பகைவன் மீது சினந்து போருக்குச் சென்ற தலைவன் (கணவன்) வரும்வரை மனம் தேறியிருந்த தலைவி (மனைவி)யின் மன நிலையைப் படம் பிடித்துக் காட்டுகிறது, இப்பாட்டு. இதனைப் பாடியவர் காவிரிப்பூம்பட்டினத்துப் பொன் வாணிகனார் நப்பூதனார் ஆவர்.

தலைவனின் வரவு நோக்கிக் காத்திருக்கும் தலைவியின் மனத்துயரத்தை விளக்கும்போது, அதே நேரத்தில் போர்க்களத்தில் இரவு நேரத்தில் தலைவன் இருக்கும் நிலையை விளக்கும் வாயிலாகப் புலவர் அந்தக் காலத்துப் போர்க்களத்தை நமக்கு எழுதிக்காட்டுகின்றார்.

“ஆறு சூழ்ந்த காட்டில், புதர்களை அழித்து, அங்கிருந்த விலங்கினங்களை ஓட்டி, முள்வேலியிட்டுப் பாசறை அமைக்கப்பட்டது. பாசறை பரப்பிலும் அமைப்பிலும் ஒரு நகரம் போலவே விளங்கியது. யானைகள் இரவில் உணவு கொள்ளாமல் இருக்க, பாகர் அவற்றை வேறு வழிகளில் தெருட்டிக்கொண்டிருந்தனர். பல்வேறு இடங்களிலிருந்து வந்த பெரிய படை இருந்தது. ஆங்கு, தனியாக அமைந்ததோர் இடத்தில் மங்கையர் விளக்கு அணையாமல் பாதுகாத்து நிற்க, மெய்க்காப்பாளர் சூழ்ந்து நிற்க, நாழிகைக் கணக்கர் பொழுது எண்ண யவனக் கலைஞர்கள் சமைத்த இருக்கையில் மன்னன் வீற்றிருந்தான். ஊமையரான காவலர் சூழ்ந்திருந்தனர்.” என்று சொல்லும் பகுதி மனக்கண் போர்க்களத்தையே கொண்டு வந்து நிறுத்துகின்றது அல்லவா?

இந்தப் பாட்டு நூற்றுமூன்று வரிகளைக் கொண்டது. இந்தத் தொகுதியில் இதுவே மிகச் சிறிய பாட்டு.

## 6. மதுரைக் காஞ்சி

தலையாலங்கானத்துச் செரு வென்ற பாண்டியன் நெடுஞ்செழியன் என்ற மன்னனுக்கு நிலையாமையை உணர்த்துவதற்காக மாங்குடி மருதனார் என்ற புலவர் பாடிய பாட்டு இது. எழுநூற்று எண்பது வரிகளைக் கொண்ட இந்தப் பாடலில் பல கருத்துக்கள் விரிவாகப் பேசப்படுகின்றன.

இவன் புகழினையும் முன்னோர் சிறப்பினையும் எடுத்துச் சொல்லி, வாழ்த்துக் கூறுவதற்குப் புலவர் பல வரிகளைப் பயன்படுத்தியுள்ளார். பாண்டி நாட்டில் அமைந்துள்ள மருதம், முல்லை, குறிஞ்சி, பாலை, நெய்தல் ஆகிய நிலங்களின் வளங்களும் சிறப்புக்களும் விரிவாக விளக்கப்படுகின்றன. அந்தக் காலத்தில் மதுரை மாநகர் விளங்கிய மாண்பு இப்பாடலில் கூறப்பட்டுள்ளது. அந்நகரின் தெருக்கள், வாணிபச் சிறப்பு, அங்கு விற்கப்பட்ட பொருள்களின் பட்டியல், வாழும் மக்கள் அவரவர்கள் செய்தொழில் முதலியனவெல்லாம் இப்பாடலில் காணக் கிடைக்கின்றன.

## 7. நெடுநல்வாடை

பாண்டியன் நெடுஞ்செழியன் பகைவர் மீது படைகொண்டு சென்றாகை அவன் வரும் வரை ஆற்றியிருக்குமாறு நக்கீரனார் பாடிய பாட்டு இது. இந்தப் பாட்டில் ஒரு இடத்திலாவது இது நெடுஞ்செழியனைக் குறித்துப் பாடப்பட்டது என்று சொல்லப்படவில்லை. ஆனால் 176ஆவது வரியில்(வேம்புதலையாத்த நோன்காழ் எஃகம்) இருக்கும் தலைவன் வேப்பம்பூ அணிந்தவன் என்ற குறிப்பைக் கொண்டு அந்தப் பூவை அடையாள மாலையாகக் கொண்டவன் பாண்டியன் என்ற காரணத்தினால் இது நெடுஞ்செழியனைக் குறிக்கிறது என்று அறிகின்றோம்.

இந்தப் பாடலிலும், தமிழகத்தின் வளம் முதலிய சிறப்புக்கள் பேசப்படுகின்றன. தலைவனை எதிர்நோக்கி இருக்கும் தலைவியைப் பற்றி விளக்கும்போது ஆசிரியர் அந்தக் காலத்தில் தமிழகத்து அரசி ஒருத்தியின் செல்வச் சிறப்பை விளக்கும் வாயிலாக புறநாகரிகத்திலும் நாம் எவ்வளவு மேம்பட்டு இருந்தோம் என்பதை அறிவிக்கிறார்.

இந்தப் பாட்டு, நூற்று எண்பத்தெட்டு வரிகளைக் கொண்டதாகும்.

## 8. குறிஞ்சிப் பாட்டு

ஒரு பெண் (தலைவி) இன்னான் (தலைவன் மீது காதல் கொண்டுள்ளாள், பழக்கமும் உண்டு என்ற செய்திகளையெல்லாம் செவிலித்தாயிடம் (தலைவியின்) தோழி எடுத்துச்சொல்வாள் இந்த நிகழ்ச்சிக்கு ‘அறத்தோடு நிற்றல்’ என்று பெயர். அந்த முறையில் இந்தப் பாட்டைக் கபிலர் பாடியுள்ளார். ஏன் பாடினார்? காரணம் விந்தையானது! ஆரிய அரசன் பிரகத்தன் என்பவனுக்குத் தமிழ் அறிவுறுத்தற்காகப் பாடினாராம்!

பண்டைக் காலத்துக் காதல் வாழ்க்கை இப்படி இருந்தது என்பதை அறிய வேண்டுமாயின் இந்தப்பாட்டு அதற்கு உற்ற துணையாக இருக்கும்,

தலைவி தலைவனை காணுவது, கருத்து இழப்பது, கலப்பது, பழகுவது, கலங்குவது, களிப்படைவது முதலியனவெல்லாம் விளக்கமாகக் கூறப்படுகிறது.

கபிலர் இயற்கையை நன்கு ஆராய்ந்த புலவர் என்பதும், அதன் இன்பத்திலே திளைத்தவர் என்பதும் தமிழ் மாணாக்கர் அறிவர் இந்தப் பாட்டில் இயற்கையை அவர் பாடியுள்ள பகுதிகள் படித்து இன்பம் பெறத்தக்கவையாகும்.

இந்தப் பாட்டு இருநூற்று அறுபது வரிகள் கொண்டது.

## 9. பட்டினப்பாலை

இந்த காலத்தில் பட்டினம் என்றால் சென்னை. அந்தகாலத்தில் பட்டினம் என்றால் அது காவிரிப்பூம் பட்டினம் தான்! அதன் சிறப்பு, அமைப்பு முதலியன இந்தப் பாடலில் பேசப்படுகிறது.

இதனைப் பாடியவர் கடியலூர் உருத்திரங் கண்ணனார் ஆவார். வஞ்சி நெடும்பாட்டு என்பது இதற்கு வழங்கும் இன்னொரு பெயர்.

அந்த நகரத்துத் தெருக்களின் வருணனைகள், அங்காடிகளின் விளக்கங்கள், பொருள்களின் சிறப்புக்கள், மக்களின் வாழ்க்கை விளக்கங்கள், விலங்கு, புள் (பறவை) இவற்றினைப் பற்றிய செய்திகள், கடற்கரை, கலங்கள் அங்குள்ள நிலை, இன்னோரன்ன செய்திகளை விரிவாக அறிய இந்நூல் பெருந்துணையாக இருக்கிறது. முன்னூற்று ஒரு வரிகளைக் கொண்டது இப் பாட்டு.

## 10. மலைபடுகடாம்

செங்கண் மாத்துவேள் நன்னன்சேய் நன்னன் என்ற வள்ளலிடம் பரிசில் பெற்று வரும் பாணன் ஒருவன் வேறு ஒரு பாணனைக் கண்டு, அவனிடம் சிறப்பு உரைத்து, அங்குச் செல்லுமாறு கூறுவதாக அமைந்துள்ளது. இரணிய முட்டத்துப் பெருங்குன்றூர்ப் பெருங் கௌசிகனார் பாடியது இப் பாட்டு கூத்தர் ஆற்றுப்படை’ என்பது இந்நூலுக்குள்ள இன்னொரு பெயர்.

மலையை யானைக்கு உவமித்து அங்குதோன்றும் ஓசையை யானையின் மதநீரான ‘கடாம்! என்றதினால் மலைபடும்கடாம் என்பது பெயர் ஆயிற்று. ஐநூற்று எண்பத்து மூன்று வரிகள் கொண்ட இப்பாடல் தமிழகத்தின் இயற்கை வளமும், குறிப்பாக மலைவளமும் விரிவாகக் கூறப்படுகிறது. இவை பத்துப்பாட்டு.

அடுத்த இதழில்
எட்டுத்தொகை இடம் பெறும்.

மயிர்க்கூச்செறியச் செய்யும்
மர்மக் கதை!
துப்பறியும் தொழிலிலே
ஓர் புதுமை!

“துப்பாக்கி
முனையிலே
துடியிடையாள்”

எழுதியது:
இரா. மதனகோபால்
பி.காம்.,டி.ஐ.பி.,(எம்.ஏ)
தனிப்பிரதி விலை. 50 காசு.

விற்பனையாளர்களுக்கு தக்க
கழிவு உண்டு.

விவரங்களுக்கு:—
இராம் பப்ளிஷர்ஸ்
1-2 சாமி முதலி தெரு,
பெங்களூர்-1.

தொலைபேசி எண்: 22715

நித்திலக் குவியல்

(சென்னை மாணவர் மன்றத் திங்கள் இதழ்)

ஆசிரியர்: தமிழ்நெறிக் காவலர் மயிலை சிவமுத்து

தித்திக்கும் முத்தமிழ் மணம் கமழும். தமிழ் மொழி வளமும், தமிழ்க்கலை நலமும், தமிழ் மக்கள் முன்னேற்றமும், ஆசிரியர்கள் நல்வாழ்வும் குறிக்கோளாகக் கொண்டது. மன்ற செய்திகளும், பிற செய்திகளும் அடங்கியது. அனைவரும் விரும்பும் அரிய எழுத்தோவியங்கள் நிறைந்தது.

சந்தா விவரம்: ஆண்டுக் கட்டணம் ரூ. 3-00
மன்ற உறுப்பினர்க்கு ரூ. 2-00
தனி இதழ் 25 காசுகள்.

விவரங்கட்கு:— ஆசிரியர், நித்திலக்குவியல்
மாணவர் மன்றம்
12, வேங்கட அய்யர் தெரு, சென்னை-1

# சென்று வருகிறேன்! செயலாற்றுங்கள்!

## அறிஞர் அண்ணா

### பெரியோர்களே!

உமது நல்வாழ்த்துகள் கிடைக்கும் என்ற முழு நம்பிக்கையுடன், இந்தி எதிர்ப்பு அறப்போரில் ஈடுபடுகிறேன். சான்றோர் பலர் கூறிவிட்டனர், இந்தி ஆட்சிமொழி ஆக்கப்படுவது அக்ரமம் என்பதை. அந்த அநீதியை எதிர்த்து அறப்போரில், நவம்பர் 17-ல் ஈடுபடுகிறேன். நாட்டுக்குக் கேடு விளைவிக்கும் முறையில் புகுத்தப்படும் ஒருஅநியாயத்தை எதிர்த்து நிற்கும் எனக்கு, உங்களின் நல்வாழ்த்துகள் தேவை, அருளிட வேண்டுகிறேன்.

### தாய்மார்களே!

உங்களால் உருவாக்கப்பட்டு வரும், எதிர்காலச் சந்ததியை உருக்குலைத்திட வருகிறது இந்தி ஆட்சிமொழி. தாய்மொழி தாழ்த்தப்படுகிறது. இது ஆகாது என்பதனை, ஆட்சியிலுள்ளோர் உணர வேண்டும் என்பதற்காகவே அறப்போரில் ஈடுபடுகிறேன்.

உங்களுடைய இதயத்திலிருந்து எழும் வாழ்த்துகளை அளித்து நான் மேற்கொள்ளும் செயலைச் சீருடையதாக்கித் தாருங்கள்.

உங்களின் பிள்ளைகுட்டிகளின் பிற்கால வாழ்வு நல்லதாக இருக்க வேண்டும் என்பதற்காகவே, இந்தி எதிர்ப்பு அறப்போர் துவக்கப்படுகிறது.

அதிலே ஈடுபடும் எனக்கு வாழ்த்தளித்து, வழி அனுப்பி வையுங்கள்.

### தமிழ்ப் புலவர்காள்!


கேட்கும்போதே, மெய்சிலிர்க்கும் விதமாக, நம் தமிழ் மொழியின் அருமைபற்றிப் பேசித் தொண்டாற்றி வருகின்றீர்கள். தமிழ்மொழியிடம் பற்று வளரவும், தாய்மொழிக்காக்க எல்லா இடமும் : எல்லா ஏற்றமும் என்று கேட்கும் உரிமை உணர்வு பெறவும் செய்தீர்கள். எம் மொழியிலும் காணக் கிடைக்காத இலக்கியக் கருவூலங்கள், கருத்துப் பெட்டகங்கள் நம் தாய்மொழியில் உண்டு என்பதனை என்போன்றோர் உணரச் செய்தீர்கள். என் போன்றோரை ஆளாக்கிவிட்ட தமிழ்ப்பெரும் புலவர்காள்! இந்தி ஆட்சிமொழி ஆக்கப்பட்டால், தமிழ் சிதையும்-அழியும்; தமிழ் கற்பது பயனற்றது எனும் நிலை நெளியும்; தமிழர் தாழ்நிலை பெறுவர் என்பதனை உணர்ந்து,

அத்தகைய கேடு களைந்திட ஏன் பங்கினைச் செலுத்தும் கடமை உணர்ச்சியுடன், அறப்போரில் ஈடுபடுகிறேன்.

இனிய தமிழால் எனை வாழ்த்தி, 'இந்தி எதிர்ப்பு அறப்போர் வெல்க!' என்று கனிவுடன் கூறி, எனது தொண்டு, மேலும் தூய்மைபெறச் செய்யுங்கள்.

### மாணவ மணிகாள்!

தாய்மொழியாம் தமிழ், உலக மொழியாம் ஆங்கிலம் இவற்றுடன், ஆட்சிமொழி ஆக்கப்படுவதால் இந்தி என, மூன்று மொழிகளைக் கற்றுத் தீரவேண்டுமாம், நீவீர்! ஆனால் இந்தியைத் தாய்மொழியாகக் கொண்டவர்களோ இந்தி, ஆங்கிலம் எனும் இரு மொழிகள் மட்டும் கற்றால்போதும் எனும் நிலைகாண்கிறேன்; உமக்கு இழைக்கப்படும் கொடுமை பற்றி எண்ணி மனம் வெதும்புகிறேன். இயற்கை அறிவு நிரம்ப இருப்பினும், தமிழ் தரும் அறிவுச் செல்வம் பெறினும், இலக்கணமற்ற, இலக்கிய வளமற்ற இந்தி மொழியில் தேறினால் மட்டுமே வாழ்க்கை அரங்கிலே வெற்றி



பெற முடியும் என்று ஆக்கிவிடுகின்றனர். எத்தனை மொழிகளையும் கற்றிடலாம்; ஆனால், எத்துணை திறமையுடன் கற்றாலும், இந்தியைத் தாய்மொழியாகக் கொண்டவர்களுடன் போட்டியிட்டு, இந்தியை தாய்மொழியாகக் கொள்ளாதவர்கள் வெற்றி பெறமுடியுமா? சிறப்பிடம் கிடைக்குமா?

கிடைக்காது என்று தெரிந்து துணிந்து மூன்று மொழிகளை உமக்கு சுமையாக்கி வைப்பதுடன், இந்தியை ஆட்சிமொழியாக்கி, அம்மொழிக்காரருடன் போட்டியிட்டு வெற்றிபெறு! இல்லையேல் கிடைத்த இடத்தில் இருந்திடு! என்று ஒரு அக்ரமத்தைச் செய்கிறார்கள்; அதனை எதிர்த்து அறப்போரில் ஈடுபடுகிறேன்.

உமக்காக, இதாவது செய்ய முடிகிறதே என்ற களிப்புடன் அறப்போரில் ஈடுபடுகிறேன்.

நாளைக்கு ஒரு வேளையாவது என்னையும் என்போல் உமக்காகப் பணியாற்றும் தோழர்களையும், எண்ணி மகிழ்ந்திருங்கள், எடுத்த காரியம் வெற்றிபெற, உமது இதயத்தில் பொங்கி எழும் ஆர்வத்தை வழங்கிடுவீர்.

### அலுவலகத்தோரே!

தமிழகத்துள்ள அலுவலகத்தார் போல, திறமையுடன், முறை அறிந்து, கடினமாகப் பாடுபடுவோர் எங்கும் இல்லை என்ற நற்பெயர் பெற்று விளங்குகிறீர்கள். எத்தகைய திட்டத்தை அரசினர் தந்திடினும் அதனைச் செம்மையாக நடத்திக் காட்டிடும் அறிவாற்றல்பெற்று புகழுடன் இருந்து வருகின்றீர்கள். இனி இந்தத் திறமைகளைக் காட்டினால் போதாது. மேல்நிலை பெற வேண்டுமானால், இந்தி மொழியில் தேறவேண்டும் என்று காங்கிரஸ் அரசு கட்டளையிடுகிறது. இந்த வயதிலே, இந்தி கற்றுத் தேறி அந்த இந்தியைத் தாய்மொழியாகக் கொண்டவர்களுடன் போட்டியிட்டு வெற்றி பெற்றுக் காட்டி, மேல் பதவி பெற வேண்டுமாமே! இது அக்ரமம் அல்லவா? அலுவலகத் துறையிலே இந்தி மொழிக்காரரின் ஆதிக்கம் புகுந்துவிடாதா? ஆம்! என்று கூறுகின்றனர் அறிவாளர். ஆற்றலுடன் ஆட்சி நடாத்தி அனுபவம் பெற்றவர்கள். கேட்க மறுக்கிறது, காங்கிரஸ் அரசு! கேடு செய்கிறார்கள் என்பது உமக்குத் தெரிகிறது. என்றாலும் அதனை எதிர்த்து நின்றிடும் நிலையில் நீவீர் இல்லை.

உமக்காக, இந்தக் கேட்டினை நீக்கிட எடுத்துக் கொள்ளப்படும் ஒரு முயற்சியே இந்தி எதிர்ப்பு அறப்போர். அதிலே ஈடுபடுகிறேன். உம் நல்லெண்ணத்தை வழங்கி, என்போன்றோருக்கு ஊக்கமளியுங்கள்.

### இதழ் நடாத்துவோரே!

உமக்கு மிக நன்றாகத் தெரியும் இந்தி ஆட்சிமொழி ஆக்கப்படுவது அநியாயம் என்பது. நெஞ்சார அறிவீர்கள் இதனை. நேர்த்தியாக விளக்கிக் காட்டுகிறீர்கள் பிரச்சினையை. ஆட்சியாளர்களுக்கு அறிவு கொளுத்திப் பார்க்கிறீர்கள். உங்களின் திறமையான வாதமும், கனிவான வேண்டுகோளும் புறக்கணிக்கப்படுகின்றன. இந்தி ஆட்சிமொழி ஆக்கப்படும் அக்ரமத்தை எதிர்க்க உமது உள்ளம் துடிக்கிறது; ஆனால் அதேபோது, ஆளுங்கட்சியிடம் பல்வேறு நிலைமைகளாலும், காரணங்களாலும் உங்களுக்கு உள்ள தொடர்பும் பாசமும், உங்களைச் செயலாற்ற விடவில்லை. உணருகிறேன்.

எனினும், உமது வாதங்களை மெய்ப்பிக்கவும், வேண்டுகோள் ஏற்றுக்கொள்ளப்படவும், இந்தி எதிர்ப்பு அறப்போர் துணை செய்யும் என்று உறுதியாக நம்புகிறேன்.

எனவே, அதிலே ஈடுபடும் என்னையும், எமது கழகத்தையும் எவ்வளவு ஏசினாலும் பொறுத்துக் கொள்கிறேன். இடையிடையே, இந்தி ஆட்சிமொழி ஆக்கப்படுவதனால் ஏற்படும் அநீதியை எடுத்துக் காட்டிக்கொண்டிருங்கள். இந்தி ஆட்சிமொழி ஆக்கப்படுவதை தமிழ்நாடு, கட்சிப் பாகுபாடின்றி எதிர்க்கிறது என்பதை எடுத்துக்காட்டுங்கள்; இந்தி ஆட்சிமொழி ஆக்கப்பட்டுவிட்டால், நீக்கப்பட முடியாத, நிரந்தரக் கேடு, தமிழ் மக்களை வாட்டும் என்பதை விளக்கிக் காட்டுங்கள். அதுபோதும். எமது செயலை சமூக விரோதச் செயல் என்றும், காலித்தனம் என்றும், கட்சி வளர்க்கும் கயமைத்தனம் என்றும் எழுதிக் கொண்டிருங்கள், வேண்டாமென்று சொல்லவில்லை. அவ்விதம் எழுதுவதன் மூலம், ஆட்சியாளர்களுக்கு உம்மிடம் அன்பும், நம்பிக்கையும் ஏற்படுவதானால், மெத்த மகிழ்ச்சி! உமது அறிவுரையை ஆட்சியாளர் கேட்டு நடந்திட முன்வருவார்களானால் மேலும் மகிழ்ச்சி அடைவேன். ஆனால் இன்று உள்ள நிலையில் எம்மையும், எமது முறைகளையும் நீங்கள் கேவலப்படுத்துகிறீர்கள்! எம்மை எமது எதிரிகள் ஏசிட இடம் கொடுக்கிறீர்கள். ஆனால் அதே போது, உம்மையும் உமது அறிவுரைகளையும், ஆட்சி நடாத்துவோர் துச்சமென்று கருதிக் கேவலப்படுகிறார்கள்.

ஆக மொத்தமாகப் பார்க்கும்போது, நாம் அனைவருமே இந்தி வெறிக்காரரின் பிடியில் கிடக்கும் ஆட்சியினரால் கேவலப்படுத்தப்படுகிறோம். இந்தக்கேவலத்தைத் துடைத்திடும் முயற்சியாக வேனும் இந்தி எதிர்ப்பு அறப்போரைக் கருதி, நெறி நின்று பணிபுரிய முன் வாருங்கள். எம்மைத் தாக்கி எழுதிடும்போது கூட, உள்ளூற எமது முயற்சியிலே அன்புகாட்டி வருகிறீர்கள் என்றே நான் நம்புகிறேன்.

அந்த நம்பிக்கை துணை நிற்கும் நிலையில்தான் அறப்போரில் ஈடுபடுகிறேன். இயன்ற அளவு இதயத்தில் உள்ள அன்பினைக் காட்டி அறப்போருக்கு ஆக்கம் அளியுங்கள்.

### அமைச்சர்களே!

உமது அறிவாற்றலில் நான் நம்பிக்கை, தெரிவிப்பவன்; உங்களை விரட்டி விட்டு வேறு எவ

ரிடமோ ஆட்சியைப் பிடித்துத் தரவேண்டும் என்ற அற்ப எண்ணம் கொண்டவன் அல்ல. இந்தி ஆட்சிமொழி ஆக்கப்படுவதை உங்களில் ஒருவர் கூட விரும்பவில்லை என்பதை நான் அறிவேன். அதனை நான் அறிந்து கொள்ளும் விதமாக உமது பேச்சுக்களில் பல அமைந்திருக்கின்றன. இந்தி எதிர்ப்பு அறப்போர் மொழி விஷயமாகத் தமிழகம் காட்டிடும் கொதிப்பு என்பதை, மத்திய ஆட்சியினருக்கு எடுத்துக்காட்டுங்கள். சட்டம் தூங்கட்டும் என்று நான் கூறவில்லை. அதனை எப்படிப் பயன்படுத்தி அறப்போரில் ஈடுபடும் எங்களைக் கொடுமையில் தள்ள முடியுமோ, அதனைக் குறைத்துக் கொள்ள வேண்டாம். அறப்போரா இது, அமளி! அறப்போரா இது, காலித்தனம்! என்று எவ்வளவு வேண்டுமானலும், ஏசுங்கள். தாங்கிக் கொள்கிறோம் ஆனல் அதே நேரத்தில், இந்தி புகுத்துவோரிடம், மறைவாக ஆகிலும், உண்மை நிலையை எடுத்துச் சொல்லுங்கள்! இந்தி எதிர்ப்பு அறப்போர் தமிழக மக்களின் மனக் கொதிப்பைக் காட்டுவது என்று கூறுங்கள். இந்தி எதிர்ப்பு அறப்போர், கட்சி பாகுபாடுகளைக் கடந்திடவல்ல பிரச்சினை என்பதைச் சொல்லுங்கள். இதயத்தின் அடியிலே, உமக்கு உள்ள எண்ணம், இந்தி ஆட்சிமொழி ஆகக் கூடாது என்பது தான்.

அதனை எடுத்துச் சொல்ல, எமது அறப்போரை ஒரு சந்தர்ப்பம் ஆக்கிக் கொள்ளுங்கள். அது சிறந்த ராஜ தந்திரம். என்று பிற்காலச் சந்ததி உம்மை வாழ்த்தும்.

இந்த முறையில் பணியாற்றினலே போதும் எமது அறப்போர் மாண்புடையதாகி விடும்.

### பிற கட்சியினரே!

இந்தி ஆட்சி மொழி: ஆக்கப்படுவதன் மூலம், இன்று உள்ள கட்சிப் பாகுபாடுகள், மறைந்துபோய், இரண்டே இரண்டு கட்சிகள் தான். அரசியல் அரங்கில் நிற்கும்; இந்தியைத் தாய்மொழியாகக் கொண்ட எஜமானர்கள் கட்சி இந்தியைத் தாய்மொழியாகக் கொள்ளாத ஊழியர்கள் கட்சி!—என்ற நிலை தான் ஏற்படும். அப்போது இன்று எம்மை எதிர்ப்பதிலே சுவை காணும், நீங்களும் அந்த எதிர்ப்பைத் தாங்கிக்கொண்டு உங்கள் நட்பை நாடும் நான் சார்ந்துள்ள கட்சியும், எல்லோரும் சேர்ந்து, ஊழியர்கள் கட்சி ஆகிவிடுகிறோம். இன்று அறப்போர் நடத்தி இந்தியை எதிர்க்காவிட்டால், நான் குறிப்பிடும் நிலை பிறக்க நீண்டகாலம் பிடிக்காது. இதனை எண்ணிப் பார்த்து நம் அனைவரையும் அடிமை நிலையில் கொண்டு சேர்த்திட எடுத்துக் கொள்ளப்படும் முயற்சியே இந்தியை ஆட்சிமொழி ஆக்குவது என்ற திட்டம் என்பதை உணருங்கள், உமது அறிவாற்றலை, மன எழுச்சியை, நேரத்தை' நினைப்பை, எம்மை தாக்குவதிலேயே முழுக்க முழுக்கச் செலவிட்டுவிட்டு, பிறகு இந்தி ஆதிக்கம் கொக்கரிக்கிறபோது, நாம் அனைவரும் ஒரே கூடாரத்திலே தள்ளப்பட்டிருப்பதைக் காணும்போது உங்களுக்கே வேதனையாக இருக்கும்.

நான் இந்தி எதிர்ப்பு அறப்போரில் ஈடுபடுகிறேன். உம்மிடம் பகைகொண்டு அல்ல; நான் உங்களுடைய' நட்பைப் பெரிதும் விரும்புகிறவன்; மதிக்கிறவன்; அதனைப் பெறமுடியவில்லையே என்று வருத்தம் கொள்கிறவன். என் மனதில் உள்ளதை நீங்கள் புரிந்து கொள்ளும்படி எடுத்துக்கூறிட போதுமான ஆற்றல் எனக்கு இல்லையே என்ற ஏக்கம் கொள்பவன்.

எனவே, வீணுக என்மீதும் எமது கழகத்தின் மீதும் பகை கக்கிக் கொண்டிருக்கும் செயலிலேயே இருந்து விடாமல், நம் அனைவரையும் ஒரு சேர அடிமைப்படுத்த, செருக்குடன் வந்திடும் இந்தி ஆட்சிமொழித் திட்டத்தைத் தாக்கிட முனைந்திடுவீர். எத்தனையோ ஆண்டுகளாக என்னை ஏசி வருகிறீர்கள்—இன்னமுமா உங்களுக்குச் சலிப்பு ஏற்படவில்லை — இன்னும் என்ன இருக்கிறது என்னைப்பற்றிச் சொல்ல! இந்தி ஆட்சிமொழி ஆக்கப்படுவதைஎதிர்த்து வெற்றி பெற்றுக் காட்டுங்கள்—இது கட்சிகளின் தனித்தனி வேலைத்திட்டம் அல்ல. மொழி ஆதிக்கத்தை எதிர்த்து நடத்தப்படும் அறப்போர். உங்களுடைய ஆற்றலில் ஒரு சிறு அளவேனும், இந்தி ஆதிக்கத்தை எதிர்த்திட, தடுத்திடப் பயன்படுத்துங்கள். அந்த நிலையில் நீவிர் இருந்திட முன்வந்தால், அறப்போரில் ஈடுபடும் எமக்குப் புதிய தெம்பு பிறக்கும்; தமிழகம் புதிய பொலிவு பெறும்.

### கழகத் தோழர்களே!

அறப்போரில் ஈடுபடுமுன்பு அனைவருக்கும் என் வேண்டுகோளை விடுத்துள்ளேன்.

என்பால் மாருத அன்பு கொண்ட தோழனே! என்னை உன் உடன் பிறப்பாக ஏற்றுக் கொண்ட தம்பியே! என்னை எவர் எவ்விதம் ஏசினுலும் கவலை கொள்ளாமல் என் அண்ணன் அப்படிப்பட்டவன் அல்ல என்ற உறுதியுடன் பணியாற்றிடும் நல்லவனே!

அறப்போரில் ஈடுபடுகிறேன்— அரசினர் எனக்கு எத்தனை கடுமையான சிறைத்தண்டனை கொடுத்தாலும் கவலை இல்லை.

வெளியே நீ கெம்பீரமாக உலவிடு! அறப்போர் வெற்றிக்கு உழைத்திடு ஆர அமர எண்ணிப்பார்த்து அடுத்த முறை அறப்போர் என்பதனை நாடறிடச் செய்திடு!

அறப்போரில் ஈடுபட்டுச் சிறை ஏகும் வீரர்களின் வீடுகளிலே உன் உற்சாகம் ஒளியூட்டட்டும்.

உன் உறுதிமிகு உழைப்பு தக்கபடி கழகத்தை நடத்திச் செல்லப் பயன்படுகிறது என்ற செய்தி கேட்டால் போதும், சிறை எனக்கு சிங்காரக் கோட்டமாகும்.

கம்பிகள் இரும்பாலானவை என்ருலும் அந்த இடம் மாளிகையாக்கி என்னை மகிழ்விக்கும்.

அங்கு அளிக்கப்படும் உணவு எந்த உருவில் எந்த நெடியுடன் இருப்பினும் அதுவே உன் நல்லெண்ணமெனும் நெய் கலந்து இனிப்பும் மணமும் இருந்திடும்.

பூட்டித்தான் வைப்பார்கள் என்னை. ஆனல் என் எண்ணம் சிறகடித்துக் கொண்டு வரும்; உன்னுடன் உலவியபடி இருக்கும்.

**சென்று வருகிறேன்!**
**செந்தமிழ் காத்திடும்**
**செயல் வீரனே,**
**சென்று வருகிறேன்!**

**அண்ணன் உள்ளே சென்றிருக்கிருன் அறப்போர் நடாத்தி என்று நீ வெளியே சொல்லு! உன் கண்களிலே ஆர்வ ஒளி வெளிப்படட்டும்!**

**தம்பி இருக்கிருன் வெளியே தமிழ் காத்திட என்று நான் சிறைக்குள்ளே இருந்து சொல்லுவேன்.**

## ஏஜெண்டுத் தோழர்களுக்கு

வணக்கம்.

நவம்பர் மாதம் முடிய பட்டியல் அனுப்பப்பட்டுள்ளது. உடன் அதற்கான தொகையை தவருது அனுப்பிவைக்க வேண்டுகிறோம்.

நிர்வாகி: 'திராவிடன்'

## 'திராவிடன்' சந்தா விவரம்

—(○)—

| | | |
|---|---|---|
| ஓராண்டு | ... | ரூ. 8. |
| ஆறு மாதம் | ... | ரூ. 4. |
| தனிப்பிரதி | ... | 16 காசு. |

நிர்வாகி
திராவிடன், சென்னை-1.

**என் கண்களில் உன்னைத் தம்பியாகப் பெற்றதனுல் ஏற்படும் பெருமிதம் ஒளிவிடும்!**

**சென்று வருகிறேன்!**

○

# அறிஞர் அண்ணு

## கழக முன்னணி வீரர்கள் சிறையில் இன்று 8-வது நாள்

# இன்னலை இன்புற ஏற்றிடுவோம்!

இனிக்கின்ற தேனினையே கொட்டி விட்டு
எட்டிக்காய் இந்திதனை எவர்தாம் ஏற்பார்!
பனிமலரை வேண்டாமென் றெதுக்கித் தள்ளி
பாங்கில்லாத் தாட்பூவை ஏற்றல் நன்றே!

மனிதனெனும் நிலைமாறி இறப்பா ரன்றி
மன்னுதமிழ் அழிந்திடவே பொறுக்கார் தமிழர்!
நனியுண்டு நந்தாயைக் காத்தற் குயிரை
நல்கிடவுந் துணிகின்ற மறவர் கூட்டம்!

அன்னைதமிழ் சிறப்பெல்லாம் இந்திக் குண்டா;
ஆண்டிடவே ஆட்சிச்சொல் வளந்தா னுண்டா?
என்னையதில் தானுண்டு என்றே எண்ணி
இயம்புகிறார் அதையாட்சி மொழியா யாக்க!

மன்னுக உலகத்து மக்க ளெல்லாம்
மகிழ்ந்துரைதா மாற்றிடசெய் வகைதா னுண்டா!
நன்னூலுங் காப்பியமுஞ் சிலம்பும் மணியும்
நாலடியும் ஈரடியும் போலொன் றுண்டா!

உயிருண்டா, உடலுண்டா, உலகம் போற்றும்
உயர்வான இலக்கணமும் அதற்கே உண்டா?
பயில்தற்கு இன்பத்தைப் பயப்ப துண்டா;
பாங்கான விஞ்ஞானம் அளிப்ப துண்டா?

எயிலன்ன கட்டுப்பா டதற்கு உண்டா;
எழுதுதற் கியல்பாக வருதல் உண்டா?
வயிற்றினையும் வாயினையும் வலிக்கச் செய்யும்
வளமில்லா இந்திக்கா வரவேற்புண்டு!

இந்திக்கு ஆட்சியினைத் தருவ தாலே
இங்குள்ளா ரடிமைகளாய் ஆவர் அன்றி
எந்தவிதம் ஒருமைப்பா டுருவே கொள்ளும்
இன்னல்தரு வேற்றுமைதா னேங்கி நிற்கும்!

அந்தியிலே செங்கதிர்தான் காண்டற் காமோ
ஆண்டஇனம் இந்திக்கு அடிமை யாமோ!
செந்தமிழைக் காத்தற்குச் சீர்சா லணியார்
செங்குருதிப் பெய்திடவுந் துடித்தே யுள்ளார்!

மண்தோன்றுக் காலத்து முன்னர் தோன்றி
மாண்புறவே வளர்கின்ற அன்னைத் தமிழை
கண்போன்று காக்கின்ற கவினு ரண்ணன்
கட்டளையை ஏற்றிட்டுக் களமே செல்வோம்!

பண்ணூர்ந்த தமிழுக்கு இன்ன லென்றால்
பார்மீது சதைமலையாய்த் திரிதல் நன்றே!
விண்ணதிர 'இந்தியேநீ ஓடு' என்போம்;
வித்தகரின் அறமுறையால் வெற்றி கொள்வோம்!

ஃ

இப்புவியின் ஒருதலைவன் அறிஞர் அண்ணா
இந்திக்கு வருகைதருஞ் சட்டந் தன்னை,

ஒப்பில்லாச் சமுதாயத் தார்க்கே இந்தி
உதவாத ஒன்றென்னும் உள்ளக் கருத்தை
இப்புவியை ஆள்வார்க்கே இடித்துக் காட்ட
எரிக்கின்ற நன்னாளை எவரும் மறவார்!

அடுத்தடுத்து இதுபோலே எரிக்கும் பணிதாம்
அண்ணனவர் தம்பியர்தாம் முறையாய்ச் செய்வர்.
தடுத்ததற்கு அரசியலார் முனைவர் அதனால்
தலைவரெலாம் வெஞ்சிறைக்கே மகிழ்ந்து செல்வர்!

வடுவில்லா முறையினிலே வல்லோர், நல்லோர்;
வையத்தார் போற்றும்மறி யலுந்தா னுண்டு!
இடுக்கண்கள் பலவரினும் இன்பங் கொண்டே
ஏற்றிடுவோம் எழிலார்ந்த தமிழுக் கென்றே!

**வேல்வேந்தன்**

4ம் பக்கத் தொடர்ச்சி

கும் பல தோழர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மதுரை மாவட்டச் செயலாளர் எஸ். முத்து, பொருளாளர் முனியப்பன், நகரச் செயலாளர் திருப்பதி பி.ஏ.பி.,எல். வட்டச் செயலாளர் பி. எஸ். மணியன் பி.ஏ. பி.எல்., காவேரி மணியன் பி.ஏ. பி.எல். ஆகியோர் கைது செய்யப்பட்டனர்.

கோவை மாவட்டத்தில் கோவை நகரச் செயலாளர் ப. கோபால், உள்ளிட்ட தோழர்களும், பின்னர் வட்டச் செயலாளர் எஸ். ஏ. ராசமாணிக்கம், சானகிராமன், ஊ. கி. ந. இராசு, உடுமலை நகரசபைத் தலைவர் சாதிக்பாட்சா, ஆகிய தோழர்களும் கைது செய்யப்பட்டனர்.

சேலத்தில் மாவட்ட அவைத் தலைவர் ஜி. பி. சோமசுந்தரம், மாவட்டச் செயலாளர் ஈ. ஆர். கிருஷ்ணன், ஆர். வெங்கடாசலம் எம்.எல்.சி., சீராமுலு எம்.எல்.ஏ., சிற்றுளி சுப்பிரமணியம் உள்ளிட்ட பல தோழர்கள் மாவட்டம் முழுமையும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தஞ்சையில் மாவட்டச் செயலாளர் மன்னை. ப. நாராயணசாமி கே. வி. ராமையா, கிட்டப்பா, கழக அவைத்தலைவர் பெத்தண்ணன், நகரச் செயலாளர் நடராசன், பொதுக்குழு உறுப்பினர் தங்கமுத்து, நகராட்சி உறுப்பினர்கள் மயூரநாதன், சுல்தான், பதி, வழக்கறிஞர்கள் சாமிநாதன், மாணிக்கவாசகம், தோழர் சேவியர் உள்பட பல தோழர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

வ. ஆ. மாவட்டத்தில் மாவட்டச் செயலாளர் தர்மலிங்கம் எம். பி. அவர்களை முதலில் கைது செய்து பின்னர் விடுவித்துள்ளனர். மாவட்டம் முழுமையும் மாவட்ட துணைச்செயலாளர் வி. டி. அண்ணாமலை, ஏ.எல்.சி. கிருட்டிணசாமி, மா. பா. சாரதி, வி. எம். தேவராஜ், பி. எஸ். சந்தானம் உள்ளிட்ட பலர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதே போல் பல பகுதிகளிலும் பல தோழர்கள் கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப் பட்டுள்ளனர்.

அரசினர் அடக்குமுறை குறித்து தமிழக சட்டமன்றத்தில் நாவலர் நெடுஞ்செழியன்: கே. ஏ. மதியழகன், அன்பில் தருமலிங்கம், து. ப. அழகுமுத்து ஆகியோர் ஒத்திவைப்புத் தீர்மானம் கொண்டுவந்தனர்.

நாவலர் நெடுஞ்செழியன் அவர்கள் பேசுகையில், "சனநாயக உரிமைகள் பறிக்கப்பட்டுள்ளன, போலீசு தேவைக்கு அதிகமான அடக்குமுறையைப் பயன்படுத்தியுள்ளது, இவற்றையெல்லாம் விவாதிக்கவே சபை நடவடிக்கைகளை ஒத்திவைக்கக் கோரி தீர்மானம் கொண்டுவரப்பட்டுள்ளது" என்று குறிப்பிட்டார்.

கே. ஏ, மதியழகன் அவர்கள் பேசுகையில், "சைதைச் சிறையிலே தன்னந்தனிமையில் அடைத்துவைக்கப்பட்டுள்ள அறிஞர் அண்ணா அவர்களின் சுட்டு விரல் அசைப்பிலே, அமைதி இருக்கிறது, அவரை அழைத்துப் பேசியிருக்கலாம் அல்லவா, அவரை விடுதலை செய்யவேண்டும் என்று நான் கூறவில்லை. கொடுங்கோலர்கள் நிறைந்த இடத்தைவிடச் சிறைச்சாலையே மேல். அண்ணா அவர்களைக் கைது செய்திருப்பது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த பிரச்னையாகும். **அண்ணா அவர்களை—இந்நாட்டின் தலைவரை—வருங்கால முதலமைச்சரை**—ஒருசிலர் எதிர்ப்புத் தெரிவித்த போதிலும் நல்லவர் பலராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள ஒரு தலைவரை, கைது செய்திருப்பது விவாதிக்கப்படவேண்டிய முக்கிய பிரச்னையாகும்" என்று குறிப்பிட்டார்.

அன்பில் தர்மலிங்கம் அவர்கள் பேசுகையில், "கைது செய்யப்பட்டுள்ள அண்ணா அவர்களைத் தனிமையாகப் பிரித்துவைத்து—சிறையில் 'சி' வகுப்பில் வைத்து—பெய்கின்ற மழையெல்லாம் அவர் அறையிலே நுழைந்து அவரை அவதிப்படுத்தும் வகையில் காவலில் வைத்துள்ளனர். போலீசு கமிஷனர் அவரை நடத்தியுள்ள விதத்தை நினைக்கும்போது இரத்தம் கொதிப்படைகிறது. இப்படிச் செய்வதற்கு அண்ணா அவர்கள் செய்த குற்றமென்ன? ஏன் இந்தக்கொடுமை? அண்ணா அவர்கள் ஆணைக்கு ஆயிரமாயிரம் தொண்டர்கள் காத்திருக்கிறார்கள். எனவே அலட்சியப்படுத்த வேண்டாம். நிலைமையை உணர்ந்து ஆட்சியாளர்கள் திருந்த வேண்டும்" என்று குறிப்பிட்டார்.

முதலமைச்சர் பக்தவச்சலம் அவர்கள் ஒத்திவைப்புத் தீர்மானத்தை எதிர்த்துப் பேசிய பிறகு, சட்டமன்றத் தலைவர் "ஒத்திவைப்புத் தீர்மானத்தை அனுமதிப்பதற்கில்லை." என்று தமது தீர்ப்பில் குறிப்பிட்டார்.

காங்கிரஸ் அரசாங்கத்தின் அடக்குமுறையைக் கண்டித்து, மக்கள் உரிமைக் கழகத் தலைவர் வழக்கறிஞர் கே. நாராயணசாமி அவர்களும், பிரஜா உரிமை சங்கத்தினரும் ஓர் அறிக்கை வெளியிட்டுள்ளனர்.

வரலாற்றிலேயே காணமுடியாத வண்ணம் நவம்பர் 17-ம் நாள் ஞாயிற்றுக்கிழமை சென்னை மெரினா கடற்கரையில் மக்கள் கூட்டமே இன்றி அமைதி நிலவியது. யாருடைய சுட்டு விரல் அசைந்தால் இந்த வையகம் விரைந்து செயல்படுமோ, அவரைச் சிறையில் அடைத்து எக்காளமிடுகிறது காங்கிரஸ் ஆட்சி!

அதிகார வெறியர்களிலேயே தலைசிறந்தவன் என்று வரலாற்றாசிரியர்களால் வர்ணிக்கப்படும் இட்லர் இருந்திருந்தால்கூட வெட்கித் தலை குனியும்வண்ணம் காங்கிரஸ் சர்க்காரின் அடக்குமுறை காட்டாட்சி நடத்துகிறது!

இன்று தர்பார் நடத்தும் கோலேந்திகள் 1967-ல் மக்கள் சமுதாயத்தைச் சந்திக்க வந்துதான் தீரவேண்டும்!

சமுதாயம் அப்போது நல்ல தீர்ப்பளிக்கத் தவறாது!

O

# தணலில் தங்கம்

——(0)——

**அறிஞர் அண்ணு அவர்கள் நவம்வர் 16-ந் தேதி கைது செய்யப் பட்டார்கள்.**

**கைது செய்யப்படுவதற்கு முன் அவர் கலந்துகொண்ட கடைசி கூட்டம், 15—11—63 அன்று நள்ளிரவு செய்யாறு திருவத்திபுரத்தில் நடைபெற்ற கூட்டமாகும். அந்தக் கூட்டத்தில் அமைப்புச்செயலாளர் என். வி. நடராசன், தொழிற்சங்கச் செயலாளர் ஏ. கோவிந்தசாமி, செங்கற்பட்டு மாவட்ட தி. மு. க. செயலாளர் சி. வி. எம். அண்ணுமலை, புலவர் கோவிந்தன் எம்.எல்.ஏ. ஆகியோர் கலந்துகொண்டனர்.**

**அண்ணு அவர்களின் சொற்பொழிவு இங்கே தரப்படுகிறது:-**

——[ ... ]——

உங்களை இன்று இங்கு சந்திப்பதில் பெருமகிழ்ச்சி கொள்கிறேன்! பெருமிதம் அடைகிறேன்.

எனக்கும் சிறைச்சாலைக்கும் நீண்டநாளாக தொடர்பு உண்டு. அந்தத் தொடர்பு நாளுக்குநாள் நெருங்கி வருகிறது.

சோறு எப்போது வேகும் என்று எப்படி சமையற்காரனுக்குத் தெரியுமோ, அதுபோல, போராட்டத்தில் ஈடுபட இருக்கும் என்னை எப்போது கைது செய்வார்கள் என்று எனக்குத் தெரியும்.

போராட்டம் நடத்தப்போகிறேன் அதை வரவேற்று எனக்கு சிறைசெல்ல அனுமதி தாருங்கள்! பெரியவர்கள் நல்லாசி கூறுங்கள்! தாய்மார்கள் நல்வாழ்த்து சொல்லுங்கள் வாலிபர்கள் நல் ஆர்வம் காட்டுங்கள்.

அதுவே போதும்! அரசியலை அமளியாக்க நான் விரும்பவில்லை!

நானே சட்டத்தை எரிக்கப் போகிறேன். அது வெறும் காகிதம் தான்! சாதாரணம் ஆனது தான்!

இதற்கு 3 ஆண்டு தண்டனை கொடுக்கலாம். இந்த தடவை சட்டத்தை கொளுத்திய பிறகோ, அல்லது கொளுத்தப் போகும் போதோ கைது செய்தால் 3 ஆண்டு உள்ளே தள்ளலாம் என்று திட்டம் போட்டு இருக்கிருர்கள்.

என்னை 3 ஆண்டு உள்ளே தள்ளினுல் என் ஆசை ஒன்று நிறைவேறும். பாடுபட்டு வளர்த்த கழகம் வளருகிறதா? இல்லையா? என்பதைத் தெரிந்துகொள்ள முடியும்.

கணவன் நான்குநாள் வெளியே போனுல் வீட்டில் இருக்கும் மனைவி கெட்டுப் போவாள் என நினைத்தால் அந்த மனைவி தேவையேயில்லை.

அது போல நான் உள்ளே சென்றுவிட்டால், கழகம் அழிந்து விடும் என்ருல், அந்தக் கழகம் எனக்குத் தேவையில்லை.

தி. மு. கழகத்தை நான் தங்கமாக கருதுகிறேன்! ஆனுல் காமராஜரோ காரீயமாகக் கருதுகிருர்.

என்னை உள்ளே தள்ளி வைத்து விட்டால் காரீயம் போல கழகம் உருகி, அழிந்து விடும் என்று கருதுகிருர்கள். ஆனுல், நான் தீயில் வைக்கப்பட்ட தங்கம் ஒளிவிடுவது போல தி.மு. கழகம் ஒளிவிடும் என்று கருதுகிறேன்.

இந்தத் தடவை நிச்சயமாக கழகம் தங்கமா? காரீயமா? தெரிந்து விடும்.

என். வி. நடராசன் என்னுடன் சிறைச்சாலைக்கு வரவேண்டும் என்ருர். ஆனுல் அவருக்குக் கிடைத்ததுகடைசிபந்தி. கடைசி பந்தி ஆயிற்றே! ஒன்றும் இருக்காது என்று கவலைப்பட வேண்டாம்—இது ஓயாத பந்தி.

இந்தப் போராட்டத்தில் எனது கணக்குப்படி ஆயிரம்பேர் சிறையில்அடைக்கப்படுவார்கள் என்று நினைக்கிறேன். மீதி உள்ளவர்கள் கழகத்தை வளர்க்க பாடுபட வேண்டும்.

நாம் எப்படிகழகத்தைவளர்க்க முடியும் என்று கருதக் கூடாது. ஒரு பெண்ணுக்கு 17 வயதில் கல்யாணம் ஆகிறது. ஒரு வருடத்தில் குழந்தை பிறக்கிறது. நமக்கு 18 வயதுதானே ஆகிறது. குழந்தையை கொஞ்சத் தெரியாதே என்று சொல்லமாட்டாள்.

அதுபோல வாக்கிலே நாணயம் இருந்தால் நெஞ்சிலே தீரம் இருந்தால், பேச்சு தானுகவே வந்துவிடும்.

ஜெயிலில் இருக்கும் போது காப்பியம் எழுதும்படி புலவர் கோவிந்தன் பேப்பர், பேனு, மை பரிசு கொடுத்தார்.

இவை இருந்தால் மட்டும் காப்பியம் எழுதிவிட முடியாது.

# நாட்டுமக்களுக்கு அண்ணுவின் நல்லுரை

இதைவிட கடுமையான தண்டனை கொடுப்பார்கள் என்று கருதுகிறேன்.

காங்கிரஸ்காரர்களுக்கு நான் தான் அதிக தொல்லை கொடுக்கிறேன். இதை நான் வருத்தத்தோடு ஒத்துக் கொள்கிறேன். என்னைப்போல வேறு எந்தக் கட்சியும் காங்கிரசுக்கு இவ்வளவு தொல்லை கொடுக்காது.

''காங்கிரஸ் இல்லவே இல்லை. இருப்பது எல்லாம் காமராஜர் தான்'' என்று ஈ. வே. ரா. பெரியார் கூறுகிருர்.

பாதி காங்கிரஸ் அழியவேண்டும் என்று கம்யூனிஸ்டு கூறுகிறது.

ம. பொ. சிவஞானம் 4 நாட்களுக்கு காங்கிரசை கண்டிப்பார். அடுத்த நாள் நீங்கள் தாய் அல்லவா? நான் சேய் அல்லவா? என்று பந்தபாசம் கொண்டாடுவார்.

என்னை இரண்டு ஆண்டுகள் உள்ளே வைக்க திட்டம் போட்டு இருக்கிருர்கள். இதனுல் என்னை இன்னும் கைது செய்யவில்லை. இப்போது கைது செய்தால் 15 நாள் உள்ளே வைக்கலாம். வேண்டுமானுல் மேலும் 15 நாள் நீடிக்கலாம்.

தெம்பு இருந்தால்தான் எழுத முடியும். கட்சியை வளர்த்து எனக்கு தெம்பை ஊட்டுங்கள். அப்படி செய்து விட்டீர்களானுல் பேனு,மை இல்லாமலே காப்பியம் பிறந்துவிடும். இல்லாவிட்டால் இந்த பரிசு பயன் இல்லாது போய்விடும்.

இப்போது நாலைந்து பேர் மட்டும் பக்கத்தில் இருக்கிருர்கள். ஜெயிலுக்குப் போய் விட்டால் முன்னுல் 10 பேர் பின்னுல் 10 பேர் இருப்பார்கள். ராஜ மரியாதையுடன் நடந்து கொள்வேன். எனவே என்னைப் பற்றி கவலைப் படவேண்டியது இல்லை.

பக்தவச்சலம் நம்மைப்பற்றி கேவலமாகப் பேசுகிருர் உண்மையிலேயே பெரியமனிதராக இருந்தால், இப்படி தரக்குறைவாகப் பேசி இருக்கமாட்டார். 'திடீர்' பெரிய மனிதரானவர் இப்படித் தான் பேசுவார்.

பல் விளக்கி விட்டு ஆற்றிலே காறித் துப்புகிரும். பிறகு அதை விலக்கி விட்டு முகம் கழுவுவது போல, அவர்கள் தூற்றலை மறந்து நாம் செயலில் ஈடுபட வேண்டும்.

○

## சென்னை மத்திய சிறையில்
## அறிஞர் அண்ணு முன்னணி வீரர்கள்

16—11—63 அன்று கைது செய்யப்பட்ட அறிஞர் அண்ணு அவர்களை, அன்று இரவு அடையாறு காவல் நிலையத்திற்கு அழைத்துச்சென்று, அடுத்த நாள் சைதைச் சிறைக்குக் கொண்டு சென்றனர்.

மீண்டும் 19—11—63 அன்று மாலை அறிஞர் அண்ணு அவர்கள் சென்னை மத்திய சிறைக்கு அழைத்துச் செல்லப்பட்டார்.

அண்ணு அவர்கள் கைது செய்ததைத் தொடர்ந்து கைது செய்யப்பட்ட அமைப்புச்செயலாளர் என். வி. நடராசன், தொழிற்சங்கச் செயலாளர் ஏ. கோவிந்தசாமி ஆகியோரும், வெளியீட்டுச் செயலாளர் சி. பி. சிற்றரசு, கொள்கை பரப்புச் செயலாளர் சத்தியவாணிமுத்து மற்றும் தோழர்கள் ஏ. வி. பி. ஆசைத்தம்பி, காஞ்சி கல்யாணசுந்தரம், நீலநாராயணன் உள்ளிட்ட கழகத் தோழர்களும், பொதுக்குழு உறுப்பினர்களும், பகுதி—கிளைக்கழகச் செயலாளர்களும் சென்னைச் சிறையில் வைக்கப்பட்டுள்ளனர்.

அண்ணு அவர்களையும், முன்னணி வீரர்களையும், நாவலர் நெடுஞ்செழியன், கலைஞர் கருணுநிதி, கே. ஏ. மதியழகன், முல்லை-சத்தி ஆகியோரும் மற்றும் கழகத் தோழர்களும் அவ்வப்போது சென்று சிறையில் பார்த்து விட்டு வருகின்றனர். அண்ணு அவர்களும் மற்ற தோழர்களும் உற்சாகத்துடன் இருக்கிருர்கள்.

ஃ

அண்ணு அவர்களுடன் கைது செய்யப்பட்ட தோழர் டி. எம். பார்த்தசாரதி காஞ்சி சிறையிலும், டி. கே. பொன்னுவேலு பூந்தமல்லி சிறையிலும், கே. பி. சுந்தரம் பொன்னேரி சிறையிலும், வெங்கா செங்கற்பட்டு சிறையிலும் இருக்கின்றனர்.

ஆசிரியர், வெளியிடுபவர், என். வி. நடராசன், அச்சிடுபவர், புவனேசுவரி-நடராசன்—சோமு அச்சகம், 16, இப்ராகீம் சேட் தெரு, சென்னை-1